**Deposition of witness**

**(Chapter XXIII code of Criminal Procedure)**

**In the court of Judicial Magistrate No.II,**

**Tindivanam.**

**CASE NO. CC. 33/2018**

**Prosecution witness – PW – 9**

| | | | |
|---|---|---|---|
| Date | 12.02.2026 | Calling | |
| Name | சசிகுமார் | Religion | |
| Father/Husband Name | சீனிவாசன் | Age | 49 |
| Village/City | ஒலக்கூர் காவல் நிலையம் | Caste. | |
| Taluka. | | | |

A1,A2 absent. 317 Cr.P.C.Petition filed and allowed.

**முதல் விசாரணை.**

1.நான் தற்பொழுது ஒலக்கூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். கடந்த 16.11.2017 ம் தேதி மயிலம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த பொழுது 19.45 மணிக்கு வீடூர் கிராமத்தில் வசிக்கும் தங்கவேல் மகன் முனுசாமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று மயிலம் காவல் நிலைய குற்ற எண்.820/2017 U/S. 294(b), 324, 506(ii) IPC படி வழக்கு பதிவு செய்தேன். பின்னர்

அசலையும் வாதியும் புகார் மனுவையும் இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**2.** பின்னர் 17.11.2017 ம் தேதி காலை 8:30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சந்திரசேகரன், ராபர்ட் ஆகியவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன். **அந்த மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசூல் அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் அன்றைய தினமே சாட்சிகள் முனுசாமி, பாண்டுரங்கன், முருகன், செல்வம், மகாதேவி ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகளின் விசாரணையில் இருந்தும் எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் பெயரில் சம்பவம் உண்மையான தெரியவர பொம்பூர் பஸ் நிறுத்தம் அருகே நின்றிருந்த எதிரி வேணுகோபால் வயது 27 த.பெ. குப்புசாமி மாரியம்மன் கோவில் தெரு, எடையப்பட்டு என்பவரை 17.11.2017-ம் தேதி 11.30 மணிக்கு காரணம் கூறி கைது செய்து கைதின்போது மாண்புமிகு உச்ச நீதிமன்ற கட்டளைகளை முறையாக நிறைவேற்றியப் பின் எதிரி பார்ட்டி சகீதம் பகல் 12:30 மணிக்கு நிலையம் வந்து எதிரியை திரேக சோதனைக்கு பின் பாரா வசம் ஒப்புவித்தேன்.

3. பின்னர் காயம் பட்ட முனுசாமி என்பவருக்கு சிகிச்சை அளித்த விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மருத்துவர் திரு ராஜ்குமார் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வாக்குமூலத்தில் சாட்சிக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று வழங்கினார். **விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச் சான்றிதழ் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கின் சட்ட பிரிவுகளை 294(b), 326, 506(ii) IPC ஆக பிரிவு மாற்றம் செய்து அந்த பிரிவு மாறுதல் அறிக்கையை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **அந்தப் பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் தலைமறைவு எதிரி வேணுகோபால் விசாரிக்க நீதிமன்ற

பினையில் சென்றுள்ளதாக தெரிந்து 19.12.2017-ம் தேதி அனைத்து விசாரணையும் முடித்து எதிரி 1-ன் செய்கையானது பிரிவுகள் 294(b), 326, 506(ii) IPC படியும் எதிரி 2-ன் செய்கையானது பிரிவுகள் 294(b), 506(ii) IPC படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணை.</u>

**1.** சம்பவம் ஆனது 01.11.2017 ஆம் தேதி நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் ஆனது 16.11.2017 ஆம் தேதி 16 நாட்கள் காலதாமதம் ஆக தான் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், அதற்கான காரணத்தை புகாரில் குறிப்பிட்டுள்ளார்கள். புகாரில் சம்பவத்தை பார்த்த நபர்கள் குறித்து குறிப்பிட்டு எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்பட்ட இடத்தில் யார் யார் இருந்தார்கள் என்று புகாரில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். சம்பவ இடமானது வாதியின் நிலம் தான் என்றால் சரிதான். அது பொதுபாதையோ அல்லது பொது இடமோ என்று குறிப்பிட்டு எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரில் கண்ணுற்ற சாட்சிகள் பற்றி எதுவும் குறிப்பிடாத போது நான் எவ்வாறு கண்ணுற்ற சாட்சிகளாக இரண்டு நபர்களை இவ்வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் எனது விசாரணையில் தெரியவந்தது.

2. இந்த வழக்கில் 2 காயச் சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் காயச் சான்றிதழ் 06.11.2017 என்றால் சரிதான். அதில் ஒரு நபர் அடித்ததாக தான் குறிப்பிட்டு சொல்லி உள்ளார் என்றால் சரிதான். அந்த காயச் சான்றிதழில் சிகிச்சைக்கு வந்த நபர் மருத்துவமனையில் இருந்து தப்பித்து சென்று விட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. இரண்டாவது காயச் சான்றிதழ் 16.11.2017 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் இரண்டு நபர்கள் தன்னை தாக்கியதாக குறிப்பிட்டு சொல்லி உள்ளார் என்றால் சரிதான். மேற்படி

இரண்டு காயச் சான்றிதழ்களில் எது உண்மையான காயச் சான்றிதழ் என்று எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் 16.11.2017 காய சான்றிதழ் உண்மையானது. புகார்தாரரை தாக்கியதாக சொல்லப்படும் கருங்கல் எதையும் நான் கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3. புகார்தாரர் பாண்டி அரவிந்தர் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டதற்கான ஆவணங்கள் ஏதேனும் கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. புகாரின்படி புகார்தாரர் தனக்கு கண்ணில் காயம் என்று தான் சொல்லி உள்ளார் என்றால் சரிதான். நான் கண் மருத்துவரை விசாரணை செய்து வழக்கில் சாட்சியாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. புகாரில் கொலை செய்து விடுவேன் என்று மிரட்டியதாக தான் குறிப்பிட்டுள்ளார் என்றாலும் ஆயுதத்தை காட்டி மிரட்டியதாக குறிப்பிடவில்லை என்றாலும் சரிதான். முதல் தகவல் அறிக்கை 13-வது காலத்தில் புகார் தாரருக்கு நகல் கொடுத்து அவரிடம் கையொப்பம் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. வேறு எங்கேயோ விழுந்து ஏற்பட்ட காயத்திற்காக எதிரிகள் மீது பொய்யாக ஒரு புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் உண்மையிலேயே சம்பவம் நடந்திருந்தால் புகார்தாரர் உடனடியாக புகார் கொடுத்து உடனடியாக வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

//திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் மைக் மூலம் சொல்லப்படும் அதை தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண்.2, திண்டிவனம்.